Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. STC. No. 527/2023
DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS – 5

| | | | |
|---|---|---|---|
| Name: | ராஜேந்திரன் | Calling: | உதவி ஆய்வாளர் ஓய்வு |
| Father's Name: | துரைசாமி | Religion: | |
| Village: | ஜோலார்பேட்டை | Age: | 62 |
| Taluk: | திருப்பத்தூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 26.03.2026 நேரம் : 11.50 AM

( எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச 317 ன் படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

அ.சா. 5 முதன்மை விசாரணை

நான் திம்மாம்பேட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக இருந்து விருப்ப ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 02.08.2017 வாணியம்பாடி நகர காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வந்தபோது வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த இப்ராஹிம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று வந்து அந்த வாக்குமூலத்திற்கு சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. வெங்கடேசன் அவர்களால் கொடுக்கப்பட்டு இருந்த நிலைய CSR 355/2017 என்பதை பரிசீலனை செய்து அந்த புகார் வாக்குமூலத்திற்கு ஏற்ப முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **அந்த புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

பின்னர் வழக்கை நானே புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு சம்பவயிடம் சென்று 02.08.2017 பகல் 13.00 மணிக்கு சம்பவயிடமாமன

கல்மண்டபம், வாணியம்பாடி அருகே சென்று பார்வையிட்டு சாட்சிகள் இம்தியாஸ், ஸ்டாலின் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ 5 மற்றும் அ.த.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் சாட்சிகள் இப்ராஹிம், முகமது பாஷா, கார்த்திக் மற்றும் மகசர் சாட்சிகள் ஆகியவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரிகளை தேடிவந்த நிலையில் 1 ம் எதிரி ஜெயிலாபுதின் என்பவரை 02.08.2017 ம் தேதி 14.00 மணிக்கு காதர் பேட்டை ஜங்சன் இடமும், 2ம் எதிரி சதாம்உசேனை 15.05 மணிக்கு காதர் பேட்டை ஜங்சன் இடமும் முறைப்படி கைது செய்து நிலையம் கொண்டு வந்து தக்க இருநபர் பிணையத்தில் நிலைய ஜாமினில் விடுவித்தேன் . அத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து எதிரிகளின் மீது குற்றம் உண்மை என தெரியவந்ததால் எதிரிகளின் மீது 294(பி), 323 இதச படிக்கு இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். எனது விசாரணையில் நான் விசாரித்த சாட்சிகள் அனைவரும் பிரிவு 161(3) குவிமுச ன் படி வாக்குமூலத்தில் உள்ளதை போல் தான் சொன்னார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை

புகார்தாரரிடம் புகார் வாக்குமூலம் எந்த தேதியில் பெறப்பட்டது என்றால் 24.07.2017 காலை 10.00 மணிக்கு, அன்றைய நிலைய அலுவலில் இருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.வெங்கடேசன் அவர்கள் தான் புகார்வாக்குமூலம் பதிவு செய்தார். முதல் தகவல் அறிக்கை என்று பதிவு செய்தோம் என்றால் 02.08.2017 பகல் 12.00 மணிக்கு நான் பதிவு செய்தேன். காலதாமதத்திற்கான காரணத்தை இறுதி அறிக்கையிலோ முதல் தகவல் அறிக்கையிலோ கூறியுள்ளேனா என்றால் இல்லை. அ.சா.1 இப்ராஹிம் 24.07.2017 ம் தேதி இரவு 08.00 மணிக்கு வாகனத்திற்கு பெட்ரோல் தீர்ந்துவிட்டால் எனது வாகனத்தை தள்ளிக்கொண்டு சென்றேன் அப்போது பின்னால் வந்த இரண்டு மூன்று நபர்கள் என்னை அடித்தார்கள் அவர்கள் யார் என தெரியாது என்றும், எதிரிகளை தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ள நிலையில் எனது விசாரணையில் அதுப்போல் கூறியுள்ளாரா என்றால் எதிரிகள் அடித்ததாக தான் எனது விசாரணையில் கூறியுள்ளார். அ.சா.2 முகமது பாஷா எனது அண்ணன் அடிப்பட்டு மருத்துவமனையில் இருப்பதாக போலிசார் சொன்னதாகவும் வழக்கை குறித்து எதுவும் தெரியாது

என்றும் எதிரிகளை தெரியாது எனசாட்சியம் அளித்துள்ள நிலையில் எனது விசாரணையில் அதுப்போல கூறியுள்ளாரா என்றால் இல்லை. அ.சா.3 தனது நீதிமன்ற சாட்சியத்தில் கோணாமேடு – நேதாஜீ நகர் செல்லும் சாலையில் மாலை 06.30 மணிக்கு நிரப்பபடாத வெள்ளை தாளில் கையொப்பம் பெற்றதாகவும் மற்றும் அ.சா.4 தனது நீதிமன்ற சாட்சியத்தில் கோணாமேடு அம்பேத்கார் சிலையிடம் மாலை 06.30 மணிக்கு நிரப்பபடாத வெள்ளை தாளில் கையொப்பம் பெற்றதாகவும் சாடசியம் அளித்துள்ள நிலையில் அவ்வாறு எனது விசாரணையில் சொல்லியுள்ளார்களா என்றால் இல்லை. நான் சொன்ன தேதி, மாதம் இடத்தில் எதிரிகளை கைது செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சம்பவயிடம் செல்லவில்லை என்றாலும் சாட்சிகளை சரிவர விசாரிக்காமல், எதிரிகளின் மீது ஒரு பொய்யான முதல் தகவல் அறிக்கையை பதிந்து தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) ராஜேந்திரன்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K